## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 136/2006** **Date:08.06.2026.**

**(PW3)- விஜயகுமார்**

**1, 2,4** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் போட் கம்பெனி வைத்துள்ளேன். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சாஸ்தங்கரையில் குடியிருந்து வருகிறேன். வாதிக்கு எனக்கும் எப்படி பழக்கம் என்றால் என்னுடைய நண்பர் ஆவார். வாதியும் பிரதிவாதியும் எந்த வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் முதல் வீட்டில் குடியிருந்தார்கள். வாதியின் பெயரில் உள்ள இஸ்டதானத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. இஸ்டதானத்தை பற்றி எதன் அடிப்படையில் குறிப்பிடுகிறேன் என்றால் வாதி கூற தெரியும். வாதி வீட்டிடை யாருக்கு எத்தனை வருடம் வாடகைக்கு கொடுத்துள்ளார் என்றாலும் யார் வாடகைக்கு இருந்தார்கள் என்றால் நினைவில்லை.

2. வாதிக்கு 2007 ல் வேலை கிடைப்பதற்கு முன்பு அவர் வேலையில்லாமல் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். ஆசிரியர் வேலை கிடைப்பதற்கு முன்பு வாதிக்கு எந்த தொழிலும் கிடையாது என்றால் சரியல்ல, கடை வைத்திருந்தார். அவருக்கு எந்தவிதமான தொழிலும் கிடையாது என்றாலும் எந்த வித கடையும் நடத்தவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டிகை சொத்தை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 2019 வருடத்திற்கு முன்பு பார்த்தேன். பட்டிகை சொத்தில் வாதியோ அவரது மனைவியோ குடும்பமோ குடியிருக்கவில்லை என்றால் தற்போது குடியிருக்கவில்லை.

3. 2020 ஆம் வருடம் வாதியின் குடும்பம் வெளியேறிய பின்பு அவரது குழந்தைகள் குளச்சல் பள்ளி கூடத்தில் படித்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. பட்டிகை சொத்து தற்போது 4 கண்டமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 கண்டமும் தனிதனி எல்கை காம்பவுண்ட் சுவர் மற்றும் கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. பட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. வாதியின் அப்பா என்மீது குளச்சல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதியின் அம்மா எவ்வாறு இறந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. வாதியின் அம்மாவின் இறுதி சடங்கில் வாதி கலந்துக்கொள்ளவில்லை என்றால் நினைவில்லை. நான் கலந்துக்கொண்டேனா என்றால் கலந்து கொள்ளவில்லை. வாதியின் அம்மா கருங்கலில் உள்ள சொத்தை விற்பனை செய்து அதன் மூலம் கிடைத்த பனைத்தை வாதி பெற்றுக்கொண்டு என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

4. 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் தகப்பனாரிடம் ஏமாற்றி சொத்தை எழுதி வாங்கிவிட்டதாக குறிப்பிட்டுள்ள விபரம் எப்போது எவ்வாறு தெரிந்தது என்றால் நினைவில்லை. வாதி 2003 ல் வாதியின் தகப்பனார் உடன் இருந்து அவரை சுவாதினப்படுத்தி அனைத்து சொத்துக்களையும் பொறுத்து ஒரு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வாங்கிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி எனது நண்பர் என்பதால் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**